**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 44 / 2022**

**2025 ம் வருடம் மார்ச் மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை**

**ம.சா.1 – போதும்பொண்ணு**

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் சமயமுத்து என்பவர் புகார் கொடுத்தார். மேற்படி சமயமுத்து எனது கணவரின் பெரியப்பா மகன் ஆவார். நான் விபத்து நடந்து இடத்திலேயே எனது கணவரை சென்று பார்த்தேன். நான் எனது கணவரை பார்த்த போது அவருக்கு தலையில் காயம் இருந்தது. எனது கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது கணவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலைக்காயம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. இந்த விபத்து முழுக்க முழுக்க எனது கணவரின் அதிவேகம் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் சாலை விதிகளை மதித்து கவனமாக காரை ஓட்டிச்சென்ற போது எனது கணவர் தான் கவனக்குறைவாக சென்று காரில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.14 பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது கணவரின் வயது 37 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார் அதற்கான சான்றும் வைத்துள்ளார். அந்த சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது கணவர் வெல்டிங் கடை வைத்துள்ளதை காட்டுவதற்கு

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் வழக்கிற்காக எனது கணவர் வெல்டிங் கடை வைத்து மாதம் ரூ.40000/- க்கு மேல் வருமானம் பெற்றதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வெல்டிங்கடை வைப்பதற்கு எனது கணவர் தனியாக எதுவும் படிக்கவில்லை எனது கணவர் அனுபவத்தின் அடிப்படையில் அந்த தொழில் செய்து வந்தார். எனது கணவருக்கு வெல்டிங் வேலை தெரியாது எனது கணவர் வேலைக்கே செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தில் இழப்பீடு எதுவும் நான் பெறவில்லை. 1ம் மனுதாரர் மாரியம்மாள் எனது மாமியார். 1ம் மனுதாரர் தற்சமயம் எந்த வேலைக்கும் செல்லவில்லை. எனது மாமனாரும் எனது ஊரில் தான் வசித்து வருகிறார். எனது மாமனாரை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. எனது மாமனாரையும் எனது கணவர் பராமரித்து வந்தார். ம.சா.ஆ.13 மாதிரி வரைபடம் விபத்திற்கு பின்பு வாகனங்களை ஒதுக்கிய பின்பு வரைந்தார்களா அல்லது அதற்கு முன்பு வரைந்தார்களா என்று காவல் துறையை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். ம.சா.ஆ.11, 12 ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கணவர் தான் முழு காரணம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. அடிப்படை ஆவணங்கள் இல்லாமல் இழப்பீடு அதிகமாக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**